| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>ஜேம்ஸ் ஆல்பர்ட் சேவியர் | OS.323/2018 | 02.08.2023 |

**PW1 – குறுக்கு விசாரணை**

நான் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண்.40/1பி. விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 3/4 ஏக்கர். நான் வாங்கிய 3/4 ஏக்கருக்கான நான்கெல்லையானது வடபுறம் பாசன வாய்க்கால், கீழ்புறம் முன்னாள் தலைவர் சண்முகம் என்பவரின் நிலம், மேல்புறம் மாணிக்கவாசகம் என்பவரின் நிலம், தென்புறம் பாசன வாய்க்கால் உள்ளது. தென்புறம் உள்ள பாசன வாய்க்காலுக்கும் தென்புறம் தான் மின்மோட்டார் உள்ளது என்றால் சரிதான். அந்த மின்மோட்டார் இருக்கும் நிலத்தின் சர்வே எண்.42/1 என்றால் சரிதான். சாட்சி மீண்டும் முன்னாள் தலைவர் சண்முகம் என்பவரின் மகன் ஆடலரசன் என்பவரின் நிலத்திற்கு கீழ்புறம் உள்ளதாக கூறுகிறார். சர்வே எண்.42/1 நிலத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர். சர்வே எண்.42/1 நிலத்தை 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் வாங்கியதாக சொல்கிறார்கள். சர்வே எண்.42/1 நிலத்தை 1,2 பிரதிவாதிகள் தான் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.42/1 ன் நான்கெல்லையானது மேற்கே கோவிந்தராஜ், வடக்கு, தெற்கில் பாசன வாய்க்கால், கிழக்கில் வீரமணியின் நிலம் உள்ளது. சர்வே எண்.42/1 ல் உள்ள பாசன மின்மோட்டாரானது வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த மின்மோட்டாரிலிருந்து பைப் லைன் மூலமாக வாய்க்காலை தாண்டி எனது நிலத்திற்கு பாசனம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். சர்வே எண்.40/1பி யை எனக்கு கிரையம் செய்து கொடுத்த தியாகராஜனும், சர்வே எண்.42/1ல் உள்ள நிலத்திற்கு வாய்க்கால் வழியாக பாசனம் செய்தாரா என்றால் எனக்கு அதுபற்றி

தெரியாது. சர்வே எண்.42/1 யை நான் கிரையம் பெற்றுவிட்டேன். வா.சா.ஆ.1 தான் நான் கிரையம் பெற்ற ஆவணம். வா.சா.ஆ.1 ன் மொத்த விஸ்தீரணம் 75 செண்ட் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான நான்கெல்லை தான் அதில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் சொத்து விபரத்தில் கீழபெருங்காவூர் கிராமம் அயன் நஞ்சை சர்வே எண்.40/1பி ஹெக்டேர் 30.5 ஏர்ஸ் உள்ள ஏக்கர் 0.75 செண்ட் நிலமும், மேற்படி நிலத்திற்கு கீழபெருங்காவூர் கிராமம் சர்வே எண்.42/1 ஹெக்டேர் 36.5 ஏர்ஸ் நிலத்தில் உள்ள 7.5 HP மின்மோட்டார் மூலம் தாங்களும், தண்ணீர் பாய்த்துக்கொள்ளும் பாத்தியமும் சேர்ந்து தங்களுக்கு கிரையம் என கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மூலம் கிரையம் பெற்ற பிறகு அந்த நிலத்திற்கு நானும், 42/1 என்ற நிலத்திற்கு தியாகராஜனும் சேர்ந்து நீர் பாசனம் செய்து வந்தோம் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதில் வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். சர்வே எண்.42/1 நிலத்தை 25.06.2018ந் தேதி தியாகராஜன் 2ம் பிரதிவாதி சுதாவிற்கு கிரையம் செய்து கொடுத்தாரா என்றால் கிரையம் செய்து கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் வாங்கியதாக சொல்லி என்னிடம் பிரச்சனை செய்தார்கள். எதிர்வழக்குரையில் 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளரா என்றால் சரிதான். நான் 2ம் பிரதிவாதியின் கிரைய ஆவணத்தை பெற்று படித்து பார்த்தேனா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் 2ம் பிரதிவாதியின் கிரைய ஆவணத்தின் சொத்து விபரத்தில் சர்வே எண்.42/1 36–1/2 ஏர்ஸ்க்கு 90 செண்ட் உள்ள நிலத்திற்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதாக கண்டுள்ளதா என்றால் சரிதான். அதில் கண்டுள்ள நான்கெல்லைக்கு உட்பட்ட 90 செண்ட்

நிலத்தை தான் பிரதிவாதிகள் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் மேற்படி நிலத்தில் உள்ள 7.5 HP மின்மோட்டார், மின் இணைப்பு உள்படவும் சேர்ந்து தங்களுக்கு கிரையம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் நிலத்தின் மதிப்பும், மின்மோட்டாரின் மதிப்பும் தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.42/1 ல் உள்ள 90 செண்டிற்கு உட்பட்டு தான் மின்மோட்டாரும் உள்ளது என்றால் சரிதான். நான் தியாகராஜன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற பிறகு 2ம் பிரதிவாதி சர்வே எண்.42/1யை கிரையம் பெற்ற பிறகும் என்னுடைய நிலம் 40/1பிக்கு தற்போது வரை மேற்சொன்ன மின்மோட்டாரிலிருந்து நான் பாசனம் செய்வதற்கு பிரதிவாதிகள் இடையூறு செய்யவில்லை என்றால் சரியல்ல செய்தார்கள். பிரதிவாதிகள் அவருடைய எதிர்வழக்குரையில் 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற மின்மோட்டார் மூலம் நான் பாசனம் செய்வதற்கு ஆட்சேபனை இல்லை என்று தான் சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் தான் வேண்டுமென்றே பிரதிவாதிகள் கிரையம் பெற்ற மின்மோட்டாரை எனக்கு சொந்தம் என்று கூறி பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சர்வே எண்.40/1பி க்கு நீர்பாசனம் செய்து வரும் மின்மோட்டர் அமைந்துள்ள சர்வே எண்.42/1 மின்மோட்டாரானது எனக்கு சொந்தம் என்று தான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். தியாகராஜன் என்பவர் எனக்கு கிரையம் செய்து கொடுக்கும்போது, நான் கிரையம் வாங்கிய நிலத்திற்கு சர்வே எண்.42/1ல் உள்ள மின்மோட்டார் மூலம் பாசனம் செய்யும் உரிமை மட்டும் தான் எனக்கு கொடுத்தார் என்றும், அந்த மின்மோட்டார் சம்மந்தமாகவோ, அது அமைந்துள்ள நிலம் சம்மந்தமாகவோ

எனக்கு கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது கிரைய ஆவணத்திலும் அது போன்று தான் வாசகங்கள் உள்ளது என்றால் சரியல்ல. 42/1 ல் உள்ள மின்மோட்டாரை அபகரிக்க வேண்டுமென்பதற்காக பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தை பெறுவதற்கு வா.சா.ஆ.1 யை கொடுத்து தான் பெற்றேன் என்றால் சரிதான். எனது பெயரை கூட்டுப்பட்டாவில் சேர்த்ததற்கு தியாகராஜன் என்பவருக்கு வருவாய் துறை மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. முறையான விசாரணை இல்லாமல் வழங்கப்பட்ட வா.சா.ஆ.4 ஆவணமானது சட்டப்படி செல்லத்ததக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 ஆவணம் சர்வே எண்.40/1 பிக்கு நான் செலுத்திய ரசீது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 சர்வே எண்.40/1 பிக்கு நான் சாகுபடி செய்ததற்கான ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் நான் கிரையம் வாங்கிய சர்வே எண்.40/1 பிக்கானது என்றால் சரிதான். மின்மோட்டார் அமைந்துள்ள சர்வே எண்.42/1 ல் உள்ள நிலம் முழுவதுமே கிரையத்தின்படி 2 ம்பிரதிவாதி சுதாவிற்கு பாத்தியப்பட்டு அவர்களது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றும், அந்த மின்மோட்டாரிலிருந்து என்னுடை நிலத்திற்கு நீர்பாசனம் செய்துவருவதற்கு 2 ம் பிரதிவாதி ஆட்சேபனை செய்யவில்லை என்றும், சொன்னால் சரியல்ல. ஆட்சேபனை செய்கிறார்கள். மின்மோட்டார் அமைந்துள்ள 42/1 யை பொறுத்து எனக்கு எவ்வித பாத்தியமும், அனுபவமும் இல்லை என்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல. எந்த தேதியில், பிரதிவாதிகள் எனது நீர்பாசன உரிமைக்கு இடையூறு செய்தார்கள் என வழக்குரையில்

சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. அது சம்மந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பும் நான் கொடுக்கவில்லை. பிரதிவாதிகள் இடையூறு செய்யாததால் தான் நான் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கிற்கு வழக்கு மூலமே இல்லை என்றால் சரியல்ல.